**O.S.No. 158/2020**

**Date:06.11.2025**

**பி.வா.சா .2 சந்திரன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆடு வியாபாரம் செய்து வருகிறேன். வாதியும் பிரதிவாதியும் எனது ஊர்க்காரர் கிடையாது மற்றும் எனது சமுதாயத்தை சேர்ந்தவரும் கிடையாது. எனக்கு சாட்சி சொல்ல சம்மன் ஏதும் வரவில்லை. நான் தான் சந்திரன் என்பதற்கு எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை. நான் இந்த வழக்கின் தரப்பினர் கிடையாது. வாதி இஞ்சினியரிங் தொழில் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் கட்டிடத்திற்கு வரைபட அனுமதி எப்போது பெறப்பட்டது என்பது எனக்கு தெரியாது. அதேபோல் மின்இணைப்பு மற்றும் தீர்வை தாவா சொத்திற்கு எப்போது ஏற்பட்டது என்பது தெரியாது. நான் தாவா சொத்தை வாங்கி கொடுக்கும் போது கட்டிடம் இருந்தது. அந்த கட்டிடத்தை கிரைய ஆவணத்தில் காட்டவில்லை மேற்படி கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் ஏதும் போடவில்லை. நான் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனக்கு நீதிமன்றங்களில் இதுபோல் சாட்சியம் அளிப்பது தொடர்ந்து பழக்கம் என்றாலும் சரியல்ல. எனது முதல்நிலை சாட்சியம் ஏற்க்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.